செ.வெ.எண்.524 நாள். 27.11.2026

திருநெல்வேலி மாவட்டம்

ஊராட்சி செயலாளர்கள் பணியிடத்திற்கான விண்ணப்பங்கள்
இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகிறது
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன், இ.ஆ.ப., அவர்கள்
தகவல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில், திருநெல்வேலி மாவட்டத்தில் 30.06.2025 முடிய 24 காலிப்பணியிடங்களும், தற்போது கூடுதலாக 8 காலிப்பணியிடங்களும் சேர்த்து ஆக மொத்தம் 32 காலிப்பணியிடங்கள் இன சுழற்சி மூலம் பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் இணையதள வாயிலாக வரவேற்கப்படுகின்றன.

a. ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, இணையதளம் வாயிலாக ஊராட்சி செயலர் பணியிடத்திற்கு விண்ணப்பித்த நபர்கள் மீள விண்ணப்பிக்க தேவையில்லை. ஏற்கனவே 24 காலியிடங்களுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களும் நேர்முக தேர்விற்கு பரிசீலிக்கப்படும். மேலும் இவ்வூராட்சிகளிலும் புதிதாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

b. புதிதாக சேர்க்கப்பட்ட 8 கிராம ஊராட்சிகளின் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.
மேற்படி காலிப்பணியிடங்களை தொடர்பான விவரங்கள் www.tnrd.tn.gov.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் மேற்கண்ட இணையதள முகவரியில் இணையதள வாயிலாக 04.12.2026 முதல் 18.12.2026 வரை விண்ணப்பிக்கலாம்

(இணையதள வாயிலாக மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்).
விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி 18.12.2026

என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.